www.Padasalai.Net www.Trb Tnpsc.com

TSM

# மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு – 2024
## தமிழ்

7 - ஆம் வகுப்பு

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 60

5 X 1 = 5

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மரம் வளர்த்தால் ....... பெறலாம்.
   அ) மாற்றி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி
2. திருநெல்வேலி .......... மன்னர்களோடு தொடர்புடையது.
   அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ
3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ....... என்றும் கூறுவர்
   அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை
4. 'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............
   அ) மலை + யளவு ஆ) மலை + அளவு இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு
5. 'அறம் + கதிர்' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .......... .
   அ) அறகதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம் கதிர்

5 x 1 = 5

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

6. உழவர் சேற்று வயலில் .......... நடுவர்.
7. காந்தியடிகள் எப்போதும் ............ ப் பேசினார்.
8. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ......... .
9. செல்வத்தின் பயன் .............. வாழ்வு.
10. கூடுகட்டத் தெரியாத பறவை ................ .

4 x 1 = 4

**III பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 11. விளைநிலம் | - | உண்மை |
| 12. விதை | - | இன்சொல் |
| 13. களை | - | ஈகை |
| 14. உரம் | - | வன்சொல் |

6 x 2 = 12

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

15. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
16. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
17. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
18. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
19. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
20. இந்த உலகம் யாருக்கு உரியது?



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

21. உருவக அணி என்றால் என்ன? சான்று தருக.
22. ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?
23. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

**V எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 X 3 = 6

24. உழவுத் தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
25. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
26. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விவரி.

**VI அடிபிறழாமல் எழுதுக.** 2 + 4 = 6

27. 'மாரியொன்று இன்றி' ...........எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை அடி பிறழாமல் எழுதுக.
28. 'உறுபசியும்' – எனத் தொடங்கும் குறள்.

**VII கடிதம் எழுதுக.** 1 x 5 = 5

29. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**VIII எவையேனும் ஒன்று மட்டும் விடையளி.** 1 x 7 = 7

30. கட்டுரை எழுதுக – என்னைக் கவர்ந்த நூல். *(அல்லது)*
"உண்மை ஒளி" படக்கதையைக் கதையாக சுருக்கி எழுதுக.

**IX அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 10 X 1 = 10

31. **தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.**
அ) என் தாயார் என்னை ....... காத்து வளர்த்தார்
*(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)*
ஆ) சிறுவயதில் நான் பார்த்த நிகழ்வுகள் ........ என் மனதில் பதிந்தன.
*(கிணற்றுத் தவளை போல / பசு மரத்தாணி போல)*
32. **கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**
*(எ.கா). திருநெல்வேலி – திரு. நெல். வேலி. வேல்*
அ) நாகப்பட்டினம் : ........ . ஆ) செங்கல்பட்டு : ............. .
33. **கலைச்சொல் எழுதுக.**
அ) Agriculture : ........... . ஆ) Simplicity : ............... .
34. **சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.**
அ) நெல்லையப்பர் கோவில் ............... உள்ளது?
ஆ) அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் .............. ?
35. **தொடர்களில் அமைத்து எழுதுக.**
அ) குறிக்கோள் : ................... .
ஆ) சிந்தித்து : ...................... .



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com